சிறப்பு அமர்வு வழக்கு எண்: 220/2024
அரசு தரப்பு சாட்சி : 31
பெயர் : திருப்பதி
நாள் : 12.11.2025

**5 முதல் 8 மற்றும் 11ம் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கண்ணன் கொலை வழக்கிற்காக அஜித்குமார் கொலை செய்யபட்டார் என்பது தான் இந்த வழக்கு என்றால் சரிதான். கண்ணன் கொலை வழக்கில் கதிரவன் உட்பட 22 நபர்கள் குற்றம் சாட்டப்பட்டனர் என்றால் சரிதான். அந்த வழக்கு இதே நீதிமன்றத்தில் அமர்வு வழக்கு எண். 23/2023 என்று நடத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சி 2 முருகவேல் மகன் ஹரிஷ் தான் கண்ணன் வழக்கில் 19ம் எதிரி என்றால் சரிதான். சாட்சி 4ன் ராஜேந்திரனின் சகோதரர் ரஞ்சித் என்பவர் தான் கண்ணன் கொலை வழக்கில் 9ம் எதிரி என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கின் சாட்சியான மார்டினின் உறவினர்கள் சேது மற்றும் துரை ஆகியோர் கண்ணன் கொலை வழக்கில் 3, 13ம் எதிரிகள் என்றால் அது எனக்கு தெரியாது. இந்த வழக்கில் சாட்சியான துரைக்கண்ணு கண்ணன் கொலை வழக்கில் 21ம் எதிரி என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சியான சுப்ரமணியனின் மகன்கள் சந்துரு மற்றும் கார்த்திக் ஆகியோர் கண்ணன் கொலை வழக்கில் 8 மற்றும் 15ம் எதிரிகள் என்றால் அது எனக்கு தெரியாது. கண்ணன் கொலை வழக்கின் சாட்சியான செந்தில்குமாரின் மகன் அஜித்குமார் தான் இந்த வழக்கில் 8ம் எதிரி என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும் சாட்சிகளல் ஒப்புக்கொள்ளப்பட்ட விவரங்களையே நான் தெரியாது என்று மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரியான துரைக்கண்ணு மற்றும்

Ad J 12
12/11/25

விசிக பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து மயிலாடுதுறை கனரா வங்கி அருகே 21.03.2024 அன்று காலை முதல் பெரிய போராட்டத்தில் ஈடுபட்டார்கள் என்றாலும் அது தொடர்பாக மயிலாடுதுறை காவல் நிலையம் குற்ற எண். 164/2024 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியும். புகாரில் அடையாளம் தெரிந்த நபர்கள், அடையாளம் தெரியாது

நபர்கள் என்று வேறுபடுத்து சொல்லவில்லை என்றால் சரிதான். 8ம் எதிரி வாகனத்தின் எதிரே வந்து மறைத்தார் என்ற குறிப்பும் இல்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் பதிவு செய்த ஆய்வாளரின் 161 குவிமுச வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு சென்று எத்தனை மணிக்கு வாக்குமூலம் பெற்ற விவரம் இல்லை என்றால் சரிதான். ஆய்வாளர் சுப்ரியா தஞ்சாவூர் செல்லவில்லை என்றாலும் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் அதனால் அந்த விவரம் அதில் சொல்லப்படவில்லை என்றாலும் அது சரியல்ல. நீதிமன்றத்திற்கு புகாரை அனுப்பிய ஏற்பட்ட கால தாமதத்தை மறைப்பதற்காகத்தான் புகாரின் இறுதிவரியில் இடைசெருகலாக தஞ்சாவூர் என்று பின்னர் யோசித்து சேர்க்கப்பட்டது என்றால் சரியல்ல. என் விசாரணையின் போது துணை தாசில்தார் ரஜினி, பாலையூர் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜீ, காவலர் நிலை 1 சதீஷ்குமார், காவலர் தினேஷ் குமார் ஆகியோர் மயிலாடுதுறை போலிசர் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும் நடவடிக்கை எடுத்ததாகவும் சொல்லியுள்ளார்கள் என்றால் விசாரணையில் சொல்லப்பட்டுள்ளது. ஆம்புலன்ஸ் ஓட்டுநர் சிலம்பரசனை விசாரித்தபோது மயிலாடுதுறை போலிசாருக்கு தகவல் கொடுத்து அதனடிப்படையில் போலிசார் அங்கு வந்து அஜித்குமாரின் உடலை எடுத்து சென்று மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில்

12/11/25

சேர்த்ததாக உள்ளது என்றால் சரியல்ல. மயிலாடுதுறை பேசுவதாக சொல்லி உடலை எடுத்து சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மயிலாடுதுறை போலிசார் யார் யார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அப்போது தேர்தல் சமயம் என்பதால் பல்வேறு பகுதியிலிருந்து பாதுகாப்பு பணிக்கு வந்ததாக நான் குறிப்பிட்டு விசாரிக்கவில்லை. மயிலாடுதுறை போலிசார் சம்பவ இடத்திற்கு வந்ததை மறைப்பதற்காக மேற்கண்ட விளக்கம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அஜித்குமாரின் உடல் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பெறப்பட்ட விபத்து பதிவேட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனக்கு நினைவில்லை. நான் அவ்வாறு தாக்கல் செய்யவில்லை அதற்கு காரணம் அதில் அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் அஜித்குமாரை வெட்டி கொலை செய்ததாக குறிப்பிடப்பட்டதுதான் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டை பெற 5 முதல் 8 எதிரிகள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் முயற்சி செய்தும் மேற்கண்ட காரணத்தால் தான் மாவட்ட காவல் துறையும் அரசு மருத்துவமனையும் அதை கொடுக்காமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வழக்கின் போக்கிற்கேற்ப மேற்கண்ட ஆவணத்தை உருவாக்கி கொள்ளலாம் எனவும் இருந்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. பார்வை மகசரில் குறிபிட்டு விளக்குகள் எரியும் தன்மையுடன் இருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு குறிப்பிடவில்லை என்றாலும் தவறான சங்கதியை சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசா 18 மின்வாரிய அதிகாரியை விசாரித்தபோது டிரிப்பிங் ரிஜிஸ்டரை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதுபோலவே சபரி எலக்டிரிகல்ஸ்

12/4/2[illegible]

நிறுவனம் தெருவிளக்குகளை பராமரிக்கிறது என்பதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு நினைவில்லை. சம்பவ நேரத்தில் அந்த பகுதியில் மின் விளக்கும் எரியும் நிலையில் இல்லை என்றாலும் மின் சப்ளையும் இல்லை என்றாலும் அதனால் தான் மேற்கண்ட விவரத்திற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அது சரியல்ல. கண்ணுற்ற சாட்சிகளே எந்த வெளிச்சத்தில் சம்பவம் நடந்தது என்று சொல்லாத நிலையில் அதற்கு நான் ஒரு விளக்கம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கண்ணுற்றதாக சொல்லப்படும் சாட்சிகளிடம் 5 முதல் 8 எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதங்களை காட்டி வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் செய்தேன். நான் அவ்வாறு செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக முதன்முறையாக இந்த விளக்கத்தை அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஆயுதங்களில் படிந்திருந்த இரத்தக்கறைகள் இருந்ததா என்றும் அவை பகுப்பாய்விற்கு அனுப்பி அறிக்கை பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அவ்வாறு பெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் அசா 1 சரவணன் என்பவரின் விபத்து பதிவேட்டில் மது வாடை வீசியதாக உள்ளது என்றால் சரிதான். நான் விசாரித்தபோது மது வாடை எதுவும் வரவில்லை. புகாரில் நாயை மேட்டிங் அழைத்து சென்றதாக சொல்லப்படும் விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசா 1 சரவணனனின் மது வாடையால் அந்த நாய் துள்ளி குதித்தது என்றாலும் அதனால் இருசக்கர வாகனம் தடுமாறி எதிர்புறம் வந்த அடையாளம்

12/4/12

தெரியாத இரண்டு இருசக்கரவாகனத்தின் மீது மோதி நான்கு நபர்கள் மீது மோதியதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. கண்ணன் கொலை வழக்கிற்கு பிறகு தாதாக்கள் போல் வலம் வந்த அஜித்குமார் மற்றும் அசா 1 சரவணன் மீது அந்த அடையாளம் தெரியாத நான்கு பேர்களுடன் ஏற்பட்ட தகராறில் அவர்கள் தான் அஜித்தை வெட்டிக்கொன்றுவிட்டார்கள் என்றால் அது சரியல்ல. அந்த விவரங்கள் வெளிவந்துவிடும் என்பதால் தான் மயிலாடுதுறை போலிசார் முன்கூட்டியே சென்ற விவரம் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல. இறந்தவரின் விபத்து பதிவேடும் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 21.03.2024 அன்று கண்ணன் கொலை வழக்கின் எதிரிகளான துரைகண்ணு தரப்பினர் ஒன்று கூடி பெரிய போராட்டம் நடத்தியன் பின் தொடர்சியாக அவர்கள் விருப்பத்திற்கேற்ப இவ்வழக்கில் எதிரிகள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. பொதுவாக மயிலாடுதுறையில் இது போன்ற கொலை சம்பவம் தொடர்பான வழக்குகளின்போது இவ்வாறு ஆர்பாட்டம் நடத்துவது வழக்கமாகிவிட்டது. நான் இவ்வாறு வழக்கிற்காக ஆதாரமின்றி தவறான விளக்கமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5 முதல் 8 எதிரிகள் பயன்படுத்திய இருசக்கர வாகனம் யார் பெயரில் உள்ளது என்பதை உறுதிபடுத்து போக்குவரத்து துறையிடம் ஆவணம் பெற்று தாக்கல் செய்தேனா என்றால் செய்துள்ளேன். அவ்வாறு செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசாஆ 48 ஆவணத்தை எழுதிகொடுத்த மணிகண்டன் என்பவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர் எழுதிக்கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அசாஆ 48 ல் உள்ளபடி மணிகண்டன் என்ற நபரே கிடையாது என்றாலும்

12/11/25

அவர் அவ்வாறு எந்த ஆவணமும் எழுதிதரவில்லை என்றாலும் இந்த ஆவணம் இந்த வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் அவரை விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 5 முதல் 8 எதிரிகளுக்கு இருசக்கர வாகனமே ஓட்ட தெரியாது என்றால் சரியல்ல. அதனால் தான் அவர்களின் ஓட்டுநர் உரிமம் முதலியன வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 5 முதல் 8 மற்றும் 11ம் எதிரிகளை மிரட்டி வெற்று காகிதத்தில் கையொப்பம் பெற்று கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் அனைத்தும் பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவர்களின் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளின் வாக்குமூலங்கள் சான்று பொருட்கள் மறைத்து ஒளித்து வைக்கப்பட்டதாக நானே தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. TN 07 BM 8425 மற்றும் TN88K 5435 ஆகிய இருசக்கர வாகனங்களின் மோட்டார் ஸ்டான்ட் டோக்கன் ரசீதுகள் எந்த எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டது என்று சரிவர கூறவில்லை என்றால் சரியல்ல. அசா 12, 13, 14 ஆகியோர் முன்னிலையில் 5 முதல் 8 எதிரிகள் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சான்று பொருட்கள் எதையும் ஆஜர் படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. அசா 14 தன்னுடைய பராமரிப்பில் அசாஆ 15, 16 ஐ பராமரிக்கவில்லை என்றும் அதனால்தான் அவரின் கையொப்பம் அந்த ஆவணத்தில் காணப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் நான் சொன்னதுபோல் கும்பகோணம் சைக்கிள் ஸ்டான்டே கிடையாது அதனால் தான் அசா 14ம் அதில் வேலை செய்யவில்லை என்பதால் தான் அங்கிருந்ததாக சொல்லப்படும் சிசிடிவி கேமரா பதிவுகள் மற்றும் உரிமம் ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அசா 22 அவர் வேலை செய்ததாக சொல்லப்படுபவரின்

12/4/23

தனியார் மருத்துவமனையின் பணிப்பதிவேடு போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 6ம் எதிரி தான் அந்த தனியார் மருத்துவமனையில் சிகிச்சை செய்தார் என்பதற்கு அவரின் ஆதார் அட்டை கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. 6ம் எதிரி அசா 22வசம் சிகிச்சை செய்தார் என்ற விவரத்தை உறுதி படுத்த 6ம் எதிரியை அவரிடம் அழைத்து சென்று உறுதிபடுத்துவில்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட வகையில் செய்யப்படாமல் காவல் துறைக்கு வேண்டப்பட்ட மருத்துவர் மற்றும் மருத்துவமனை உரிமையாளரையும் பயன்படுத்தி அசாஆ 32 ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. கைப்பற்றபட்ட ஆயுதங்களை பிரேத பரிசோதனை செய்த மருத்துவரின் காண்பித்து இந்த ஆயுதங்களால் இத்தகைய காயங்கள் ஏற்படுமா என்று கேட்டு தெரிந்து கொண்டேன். அதை குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் வழக்கிற்காக மருத்துவரிடம் ஆயுதத்தை காட்டி விளக்கம் பெற்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசா 9 அலெக்ஸாண்டர் என்பவர் என் விசாரணையில் 8ம் எதிரிதான் கொலைக்கு காரணம் என்று சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. விபத்து பதிவேட்டில் நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரிலும் அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட வகையில் தான் சொல்லப்பட்டுள்ளது நான் வழக்கிற்காக பொய்யா சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையில் ஐந்து நபர்கள் தாக்கியதாகவும் ஒரு நபர் வழிமறித்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கைக்கு மாறுபட்டு உண்மைகளை மறைத்து

12/11/24

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 5ம் எதிரியை தொடர்பு படுத்து 21.03.2024 அன்று அசா 1 மற்றும் 2 கொடுத்துள்ள வாக்குமூலங்கள் 22.03.2024 அன்று நீதிமன்றம் வந்துள்ளது என்றால் சரியல்ல. அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. 06.04.2024 அன்று 6, 7, 8 மற்றும் 11 எதிரிகளை தொடர்புபடுத்தி அசா 1 மற்றும் 2 ஆகியோர் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் அந்த வாக்குமூலங்கள் 30.04.2024 அன்று நீதிமன்றம் வந்துள்ளது என்றால் சரியல்ல. அன்றைய தினமே அனுப்பிவிட்டேன். மேற்கண்ட ஆவணங்கள் 5 முதல் 8 மற்றும் 11 ம் எதிரிகளை தொடர்பு படுத்து தயார் செய்யப்பட்டதால்தான் கால தாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முருகவேல் மற்றும் மார்டின் ஆகியோரை 21.03.2024 சம்பவ இடத்திலும் 06.04.2024 அன்று சாட்சியின் இருப்பிடத்தில் வைத்தும் விசாரணை செய்தேன். மேற்கண்ட வகையில் சாட்சிகள் நான் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் விசாரணை செய்யவில்லை என்றாலும் 21.03.2024 தேதியிட்ட வாக்குமூலங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. அது போலவே 5முதல் 8 மற்றும் 11ம் எதிரிகளின் தந்தை பெயர் முகவரி உள்ளிட்ட எந்த விவரங்களையும் அசா 2 முருகவேல் அவரின் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 09.07.2025 வரை அசா 2 மற்றும் 3ற்கு மேற்கண்ட எதிரிகளின் தந்தை பெயர், முகவரி எதுவும் தெரியாது என்றாலும் வழக்கிற்காக நான் அவர்களின் பெயரை உட்படுத்தி வாக்குமூலம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. ஞானப்பிரகாசம் என்பவரை 08.04.2024 அன்று காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்யததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 30.04.2024 அன்று நீதிமன்றம் அனுப்பப்பட்டுள்ளது என்றால்

12/11/25

சரியல்ல நான் அந்த வாக்குமூலத்தை அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டேன். மேற்கண்ட வகையில் நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விசாரிக்கவில்லை என்றாலும் அவரின் வாக்குமூலம் 5 முதல் 8, 11 எதிரிகளை தொடர்பு படுத்தி தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரிகளின் புகைப்படத்தை சாட்களிடம் காண்பித்து விசாரணை செய்தேனா என்றால் இல்லை. ஏனெனில் எதிரிகளின் பெயர், விலாசம், அடையாளத்தை சாட்சிகள் குறிப்பிட்டு கூறியதால் புகைப்படத்தில் காட்டவில்லை. அசா 3 என்னுடைய விசாரணையில் 8ம் எதிரி அஜித்குமாரை பார்த்ததாக சொல்லியுள்ளார் அந்த திசையில் நின்றார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. அசா 1 ஐ நான் தஞ்சாவூர் அரசு மருத்துவமனை 21.03.2024, 22.03.2024 ஆகிய தேதிகளில் விசாரிக்காமல் அந்த வாக்குமூலங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. ஏனெனில் அவர் இடைப்பட்ட காலத்தில் 06.04.2024 வரை அவர் சுயநினைவின்றி இருந்தார் என்றால் சரியல்ல. 06.04.2024 அன்று எதிரிகளின் பெயர் விவரங்களை உட்படுத்தி மேற்கண்ட தேதியில் வாக்குமூலம் தயார் செய்யப்பட்டதால் தான் அந்த வாக்குமூலம் 25.04.2024 அன்று நீதிமன்றம் வந்தது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அடையாளம் தெரியாத எதிரிகள் இருந்த நிலையில் காவல் நிலை ஆணை எண். 600 ன்படி அடையாள அணிவகுப்பு நான் நடத்தவில்லை என்றால் சரியல்ல. அசா 1 தரப்பினரின் விருப்பத்திற்கேற்ப எதிரிகளை சேர்த்ததால் தான் இந்த தவறு நடந்துள்ளது என்றால் சரியல்ல. காவல் நிலைய பொது நாட்குறிப்புகள் அடையாளம் தெரியாத நான்கு நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மயிலாடுதுறை காவல் நிலைய

12/11/25

பொது நாட்குறிப்பில் 20.03.2024 முதல் 22.03.2024 வரையான இந்த கொலை வழக்கு சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களும் பொது நாட்குறிப்பில் உள்ளது என்றால் சரியல்ல. இறந்தவர் மற்றும் காயம்பட்ட நபர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதை ஊர்ஜிதம் செய்யாமல் வழக்கில் முன்வைக்கப்பட்ட சட்டபிரிவுகள் ஈர்க்கப்படாத நிலையில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

12/11/25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

12/11/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை